[2nd March 1966

' இரயில்வே ' மேம்பாலங்கள்

*151 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) கோடம்பாக்கத்தில் கட்டி முடிக்கப்பட்ட ரயில்வே மேம்பாலத்திற் கான மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் சென்னை மாநகராட்சியின் பங்குத் தொகையும் ரயில்வே இலாகாவின் பங்குத் தொகையும் முறையே எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The total estimated cost of the work is Rs. 42·40 lakhs, of which a sum of Rs. 3·40 lakhs being the cost of the Railway portion of the work was met by the Southern Railway and the balance of Rs. 39·00 lakhs, the cost of the road portion, was shared equally by the State Housing Board and the Government.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தப் போக்குவரத்து மேம்பாலத்திற்கு ஆகும் செலவை ரயில்வே நிர்வாகமே ஏற்றுக்கொள்ள இந்த அரசாங் கம் ஏன் முயற்சி செய்யக் கூடாது என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்போதுள்ள ஏற்பாட்டின்படி லெவல் கிராசிங் பகுதியில் ஆகும் செலவை ரயில்வே இலாகா ஏற்றுக்கொள்ளும். அப்ரோச் ரோடு செலவை சம்பந்தப்பட்ட அதாரிடிகள் தாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

SRI M. S. SELVARAJAN : Is there any phased programme for having such overbridges throughout the States ?

கனம் திரு. வெ. ராமையா : பலவிடங்களில் மேம்பாலம் கட்டவேண்டு மென்று திட்டம் இருக்கிறது. நிதி நிலைக்குத் தகுந்த வகையில் இவை அவ்வப்போது பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

* 152 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ரோடில் வேலூர் டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள ரயில் பாதையின் மீது மேம்பாலம் போடு வதற்காக சர்வே செய்யப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

கனம் திரு. வெ. ராமையா : (அ)-வும் (இ)-வும்: வேலூர் நகராட்சி யில் 46-ம் எண் தேசீய நெடுஞ்சாலையின் இராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி சாலையில் 87/1 மைலில் உள்ள இருப்புப்பாதை சாலை சந்திப்பிற்குப் பதிலாக, மேம்பாலம் கட்டும் வேலை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. நான்காவது திட்ட காலத்தில் நிறை வேற்ற வரிசைப்படுத்தியுள்ள முறைக்கேற்பவும், கிடைக்கும் நிதி வசதியைப் பொறுத்தும் அத்திட்ட காலத்தில் இதை நிறைவேற்றுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ர. ஜீவரத்தினம் : வேலூர் நகரம் விரிவடைந்து கொண்டே வருகிறது. ஜனத்தொகையும் பெருகி வருகிறது. இங்கே மேம்பாலம் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. நான்காவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றாலும் இதற்கு பிரையாரிடி கொடுத்து, நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயே இதை நிறைவேற்றிக்கொடுக்க அமைச்சர் ஆவன செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : எந்த எந்த இடங்களில் மேம்பாலம் கட்டவேண்டும் என்பதை அந்த அந்த இடங்களில் உள்ள போக்குவரத்து நெரிசல், அவசியம், இவற்றைப் பார்த்து நிர்ணயிப்பார்கள். பிரையாரிடி கொடுப்பது என்பது ராஜ்ய மட்டத்தில்தான் பரிசீலனை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : சென்னையில் இருந்து சேலம், கோவை, பங்களூர், பாம்பே முதலிய இடங்களுக்குச் செல்லும் ஒரே ஒரு ரோடு இதுதான். போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. நிதி வசதி இருந்தால் என்று சொல்லாமல் நிச்சயமாக இந்த மேம்பாலத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? எல்லா மேம்பாலங்களையும் உடனடியாகக் கட்டித் தரவேண்டும் என்பது தான் என்னுடைய இலாகாவின் நோக்கம். நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப நாம் வகுத்துக்கொண்டுள்ள பிரையாரிடி லிஸ்ட் அடிப்படையில் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல மேம்பாலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பல என்றால் என்ன என்ன என்று சொல்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : மூலக்கேள்வி ஒரு குறிப்பிட்ட இடத்தின் மேம்பாலத்தைப் பொறுத்தது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அவர் கேட்ட விவரங்களைத் தருகிறேன்.

பாலாற்றுப் பாலம்

***153 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம் :** }
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையில் உள்ள பாலாற்றுப் பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆமெனில், அவ்வேலை எப்போது மேற்கொள்ளப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : வேலூரில் உள்ள பாலம் முன்புகூட ஒரு தடவை வீறல் ஏற்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. ஏன் இந்தப் பாலத்தை ரிப்பேர் செய்யக்கூடாது? இல்லாவிடில் இதை அகலப்படுத்தவாவது இந்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுபற்றி சீ. ஃப் என்ஜினியர் அனுப்பியுள்ள குறிப்பு—**Though the structure is old, it has withstood the traffic so far**-என்பதுதான். அபாயம் இருப்பதாக அவர் கருதவில்லை.

திரு. ர. ஜீவரத்தினம் : இந்தப் பாலம் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதனால் தினசரி விபத்துக்கள் ஏற்படுகின்றன. காட்பாடிக்குச் செல்லவேண்டுமென்றாலும், அங்கிருந்து வரவேண்டுமென்றாலும் ஒரே பாதை நெரிசலாக போக்குவரத்து ஸ்தம்பிக்கிறது. ஆகவே, உடனடியாக விரிவு படுத்த ஆவன செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தின் விருப்பமும் இதை உடனே மேற்கொள்ளவேண்டும் என்பதுதான். ஆனால், நிதி வசதியைப் பொறுத்தே செய்யவேண்டியிருக்கிறது.

விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்

***154 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஏதேனும் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரம் என்ன?